அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், விழுப்பணங்குறிச்சி ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு செந்துறை கோட்டத்தில் 5000 மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா உள்ளார்.

கலைஞருக்கு 16 அடி உயர வெண்கலச் சிலை.... முதல் பக்கத் தொடர்ச்சி

சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் முதற்கட்டமாக 301 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் ரூ.102 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

நலத்திட்ட உதவிகள்

மேலும், உருக்காலையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பேரிடர் மையம், நெடுஞ்சாலைத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, நீர்வள ஆதாரத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுற்றத் திட்டப்பணிகளைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள், கழக முன்னணியினர் பொதுமக்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

மேட்டூர் அணை இன்று திறப்பு

இதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (12.06.2023) காலை குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

தருமபுரி கிழக்கில் மருத்துவ முகாம்!

தடங்கம் சுப்ரமணி வழங்கினார்!

தருமபுரி, ஜூன் 12- தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி தலைமையில் அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து தருமபுரி ரோட்டரி ஹாலில் இலவச கண்சிகிச்சை முகாம் மற்றும் பொதுமக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் நகர செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்ற தலைவர் லட்சுமி, நகர் மன்ற துணைதலைவர் நித்யா அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி, அவைத் தலைவர் செல்வராஜ், நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன், ஐ.டி, விங் கௌதம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஹரிவிக்னேஷ், முன்னாள் நகர செயலாளர் மே.அன்பழகன், தடங்கம் இளைய சங்கர், ஜி.பழனிச்சாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம், பல்லடம் ஒன்றியம், ஊஞ்சபாளையத்தில் கழக மூத்த முன்னோடிகள் இருவருக்கு ரூ 10,000 வீதம் ரூ 20,000 ரொக்க பணத்தினை மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் நா.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

அரியலூர் - செந்துறை ஒன்றியம் - விழுப்பணங்குறிச்சியில்

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 5,000 மரக்கன்றுகள் நடும் விழா!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர்,ஜூன்,12 அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், விழுப்பணங்குறிச்சி ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு செந்துறை கோட்டத்தில் 5000 மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சார்பில் தமிழகம் முழுவதும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 5,00,000 மரக்கன்றுகள் நடும் திட்டம் நெடுஞ்சாலைத்துறை மூலம் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் மூலம் அரியலூர் உட்கோட்டத்தின் சார்பாக 5000 மரக்கன்றுகளும், செந்துறை உட்கோட்டத்தின் சார்பாக 5000 மரக்கன்றுகளும், ஜெயங்கொண்டம் உட்கோட்டத்தின் சார்பாக 5000 மரக்கன்றுகளும் என ஆக மொத்தம் 15,000 மரக்கன்றுகள் நட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் செந்துறை நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டத்தில் செந்துறை சாலை துவங்கி ஜெயங்கொண்டம் சாலை வரை சாலையின் இருபுறங்களிலும் நிழல் தரக்கூடிய அத்தி, நாவல், மகிழம், வேம்பு, புங்கன், ஆலம் ஆகிய மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மரக்கன்று நட்டுவைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து, மரக்கன்றுகளை முறையாக பராமரித்திடவும், இதேபோல் அரியலூர் முதல் செந்துறை வரை உள்ள சாலையில் பணிகள் முடிந்தவுடன் சாலையின் இருபுறங்களிலும் மரக்கன்றுகள் நட்டு பராமரித்திட நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் உத்தண்டி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், உதவிக் கோட்டப் பொறியாளர் ராஜா, உதவி பொறியாளர் முரளிதரன், வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.சி.லூயிகதிரவன், ஆ.சசிகுமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவ.பாஸ்கர், ஒன்றிய துணை செயலாளர்கள் காளமேகம், கருணாநிதி,கோடி, அன்பரசி, ஆனந்த், ரமணி,மற்றும் நெடுஞ்சாலை துறை அலுவலர்கள்,மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

சோ.துரைபாண்டியன் முன்னிலை! திருமதி மாலதி தலைமை! கோவை வடக்கு மாவட்டம்-

கவுண்டம்பாளையம் - அண்ணாநகரில் காவல் செக்போஸ்ட் திறப்பு!

மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்!

கோவை, ஜூன் 12- கோவை வடக்கு மாவட்டம் - கவுண்டம்பாளையம் - அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் அருகில், நல சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக ஒருங்கிணைப்பாளர் சோ துரைப்பாண்டி யன் முன்னிலையில் 10.6.2023 சனிக்கிழமை காலையில், கழக மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி மாலதி தலைமையில் ஏற்பாட்டில் எலுமிச்சம் பழம் ஜூஸ் கடும் வெயிலில் அல்லல் பட்ட பாதசாரிகளுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சியை அடுத்து தொடர்ச்சியாக ஏற்கனவே அறிவித்தபடி மாலை ஐந்தரை மணி மணி அளவில், அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் ஆனது மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் ஐ.பி.எஸ்ஸால் முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர துணை ஆணையர்கள் , மாநகர உதவி ஆணையர் திருமதி பாசினா பீவி அவர்கள், கவுண்டம்பாளையம் காவல் ஆய்வாளர் ராஜேஷ் அவர்கள் மற்றும் அனைத்து காவலர்கள் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாணவ மாணவிகளுக்கு மாநகர காவல் ஆணையர், கிப்ட் பாக்ஸ், நோட்டு புத்தகங்கள் வழங்கி அவர்களுக்கு ஆலோசனையும் வழங்கினார் .

மேற்கண்ட காலை மாலை இரண்டு நிகழ்ச்சிகளிலும், 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வன், 33 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணன், 34 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி மாலதி, 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் திரு. கா. பொன்னரசு, சுற்றிச் சுழன்று எடுத்த வேலையை திறம்பட செய்த மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி ஆலிஸ் பிரசன்னா, கவுண்டம்பாளையம் பகுதிக்கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி, காவல் துணை ஆய்வாளர் (ஓய்வு) மதிவாணன் ,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சண்முகம், அண்ணா நகர் குணசீலன், கார்லின், மின்னல் சுரேஷ் , இ சர்வீஸ் மோகன்ராஜ், கோவை லேப் சிவகுமார், லயன் சந்திரலிங்கம், மார்க்கெட் தயானந்தன், பிஎஸ்என்எல் ஜெயசேகர், லயன் மணிகண்டன், ரியல் எஸ்டேட் ராதாகிருஷ்ணன், சலூன் பால சண்முகம், ஆட்டோ நகர் நலச்சங்க நிர்வாகி வீரப்பன், அன்பரசு பேப்பர் கண்ணன், அன்பு நகர் ஜான் , லைன் குமரேசன் லட்சுமி நகர் லயன் பூமிநாதன் கோயில் கமிட்டி கண்ணன், வெங்கடேஷ், சாந்தகுமார் குமாரவேல், ஆம்புலன்ஸ் ராகவன், 36 வது வார்டு சார்ந்த ஐடி சுரேஷ், பி எஃப் காலனி சண்முகம், மனோகரன், மகளிர் அணி கவிதா, இளைஞர் அணி சிவசங்கர், விக்னேஷ், கார்லின், நீலி அம்மன் நகர் சிவசங்கரன், ஜோதி, திவ்யா கூலி நெசவாளர் காலனி முத்து லட்சுமி, சரண்யா, சாந்தினி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் உமா சங்கரி, சத்யா, மோகனசுந்தரி, யாஸ்மின் ரோஸ்மின், தில்சத்,பஞ்சு வர்த்தக அணி ராம்குமார், தொண்டரணி மோகன் குமார் லயன் முரளிதரன், சங்கர் பிரேமா ,ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

தொடர்ச்சியாக 11 வது நிகழ்ச்சியாக வரும் 17.6.2023 சனிக்கிழமை அன்று காலை 10 மணி அளவில், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மரம் நடும் விழா நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக , வெகு விமர்சையாக நடைபெற உள்ளது

புதுக்கோட்டையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆறுதல்!

கருப்பட்டி பட்டியில் புதிதாக கட்டப்பட்ட நெற்களம்!

டாக்டர் வை.முத்துராஜா திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை,ஜூன் 12- புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கருப்பட்டிபட்டி ஊராட்சி உருமகோவில் திடலில் விவசாயிகளில் நலன் கருதி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்ட நெற்களத்தை விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தெற்கு ஒன்றிய செயலாளர் தவ பாஞ்சாலன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, அரசு ஒப்பந்தக்காரர் என்.ஆர்.பரிமளம், மாவட்ட பிரதிநிதி மயில் வாகனன், அரசு ஒப்பந்தக்காரர் ஆர்.மதியழகன், கழக நிர்வாகிகள் ரெங்கசாமி, இளைஞர் அணி மணி மற்றும் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி ஒன்றியம் முள்ளங்குறிச்சி ஊராட்சி சூரக்காடு, கோட்டைக்காடு, கறுப்பகோன் தெரு, வடத்தெரு ஊராட்சி, பட்டத்திக்காடு ஊராட்சி தொண்டைமான்தெருஉள்ளிட்ட பகுதிகளில் 7 / 6 /2023 அன்று எதிர்பாராத விதமாக வீசிய சூறாவளி காற்றில் பல்லாயிரக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்தன 9 /7 /2023 அன்று நேரில் சென்று சேதம் அடைந்த வாழை மரங்களை பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறி பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் கிடைத்திட உடன் வருகை புரிந்த அதிகாரிகளுக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தினார்.

இந்நிகழ்வின் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் .தவ. பஞ்சாலன், அரசு ஒப்பந்தக்காரர் என்.ஆர்.பரிமளம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

சிவகங்கை தெப்பக்குளத்தை தூய்மைப்படுத்தும் பணி!

நகர்மன்றத் தலைவர் துரைஆனந்த் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஜூன் 11- சிவகங்கை நகரின் மையப் பகுதியில் மிகவும் பழமை வாய்ந்த தெப்பக்குளம் உள்ளது. நகரில் பல்வேறு பணிகளுக்கு இந்த தெப்பக்குளம் பயன்பட்டு வருகின்றது. நீண்ட நாட்களாக பயன்படுத்தப்படாதால் பாசியும் குப்பையும் சேர்ந்து இருந்தது. இதை தூய்மைப் படுத்தும் பணியை எல்.என்.டி நிறுவனத்தின் சார்பில் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

எல்.என்.டி. நிறுவனம், நகராட்சி அலுவலர்கள், தீயணைப்புத் துறை ஊழியர்கள் இணைந்து இந்த தூய்மைப்படுத் தும் பணியினை மேற்கொண்டார்கள். தூய்மைப்படுத் தும் பணியினை சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த் துவக்கி வைத்தார்.

நகராட்சி ஆணையாளர் பொறுப்பு திருமதி பாண்டீஸ்வரி முன்னிலை வகித்தார். தீயணைப்பு அலுவலர் நாகநாதன் தலைமையிலும் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தினேஷ்குமார் தலைமையிலும் நகராட்சி ஊழியர்கள் எல்.என்.டி. நிறுவன ஊழியர்கள் சுமார் 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தெப்பக்குளத்தை தூய்மைப்படுத்தி டும் பணியில் ஈடுபட்டார்கள் . காலையில் துவங்கிய பணி மாலை வரை நடைபெற்றது .

இந்த நிகழ்ச்சியில் எல்.என்.டி நிறுவன திட்ட மேலாளர் பிரதாப், கணக்கர் ராஜேஸ்கண்ணன், பாதுகாப்பு அலுவலர் பிரதீப் குமார் கட்டுமானமேலாளர் மார்த்தாண்ட குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் வீர காளை நாச்சியார், எஸ். ஜெயகாந்தன், ராமதாஸ், சண்முக நாதன், துப்புரவு ஆய்வாளர் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

கோ.தளபதி - பி.வாசு பங்கேற்பு!

மதுரையில் முதல்வருக்கு நன்றி சொல்லும் மாநாடு!

கோவில் பூசாரிகள் நலச்சங்கம் ஏற்பாடு!

மதுரை, ஜூன் 12 - பூசாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகின்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் மாநாடு மதுரையில் நாளை காலை 11.00 மணியளவில் கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் புதூர் மார்க்கெட் பத்மா ஆர்யா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., நலச்சங்க மாநிலத் தலைவர் பி.வாசு மற்றும் எஸ்.சங்கர், கே.சுந்தரம், டி.கணேசன், இ.பி.பத்மநாபன், ஆர்.சண்முகசுந்தரம், ஆர்.முருகன், பி.தங்கபாண்டியன், கே.எல்.குமார், எஸ்.ராஜசேகரன், சவரிராயன், ஏ.வேலு, டி. சீனிவாசன், பழ.கருப்பையா, பாஸ்கரசேதுபதி உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநில நிர்வாகிகள், எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், ஜெ.வீரமணி, கே.இ.பிரகாஷ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட நிர்வாகிகள் கே.குமார்முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, ஆர்.பொன்னுசாமி, ஜெ.திருவாசகம், கே.சந்திரசேகர், இரா.சேகரன், அக்னிசந்துரு, வில்லரசம்பட்டி முருகேசன், குத்தூஸ் ஜீயாவுதீன், விமல் (எ) நந்தகுமார், சி.எ.கார்த்திகேயன், ஜாகீர்உசேன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. வாசுதேவன்

ஜூன் 12 (2020)

தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.